<u>SC No.163/2018</u>

எதிரிகள் 1 முதல் 6 ஆஜர். எதிரிகள் 7 முதல் 10 ஆஜரில்லை. எதிரிகள் 7 முதல் 10 வரையிலான எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>அ.சா.1 திருமதி. சுசீலா, க/பெ.ஜெகநாதன்</u>

<u>தேதி- 04.03.2024</u>

இன்று மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் தொடர்ந்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி-</u>

முதலில் நான் சாட்சியம் அளிக்கும் போது எனக்கு அப்போது பி.பி., சுகர் ஆகி உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. தற்போது நான் எல்லாவற்றையும் சரியாக சொல்கிறேன் என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார். காவாங்கரையில் என் மகன் அய்யோ அய்யோ என என் உயிர் போகுது, காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று சொல்ல சொல்ல ஞானவேல் என்பவர் சாட்சி செய்து காட்டினார், கழுத்தின் வலது புறம் வெட்டினார், தனசேகர் என்பவர் என் மகனின் கழுத்தை பிடித்து தூக்கினார், அப்போதும் என் மகன் அம்மா என்னை காப்பாத்து மா என்று சொல்ல நான் சென்றுக் கொண்டிருக்கிறேன்.

நாகப்பன் மற்றும் இளையவேலும் என் மகனை இரண்டு பக்கமும் கைககளை பிடித்துக் கொள்ள இவனை உயிரோடு விட கூடாது, அரைகுறையாக விட்டுவிட்டால் நமக்கு தான் தீங்கு என்று நாகப்பன் சொன்னார், அவர் சொல்ல சொல்ல நான் என் மகனை பெயரை சொல்லிக் கொண்டே ஓடினனேன். எதிரிகளின் 3 பைக்கில் லைட் எரிந்துக் கொண்ட வெளிச்சத்தில் நான் பார்த்தேன், என் மகனின் பைக் செடி ஓரமாக விழுந்து கிடக்கிறது. அந்த லைட் வெளிச்சத்தில்

பார்த்த போது நான் விஜி ஓடி வாடா என்று சொல்லிக் கொண்டே சென்றுக் கொண்டிருக்கம் போது என் மகனை பார்ப்பதா எதிரிகளை பிடிப்பதா என்று தெரியாமல் கத்திக் கொண்டிருந்தேன்.

எதிரிகள் அங்கிருந்து பைக்கில் புதுப்பாளையம் சென்று புதுப்பாளையத்தில் காந்தி என்ற உறவினர் வீட்டிற்கு சென்று வண்டிகளை விட்டுவிட்டு ஆற்றின் குறுக்கே சென்று கருவேப்பம்பூண்டி என்ற ஊருக்கு சென்றுவிட்டார்கள். நான் ஆம்புலன்ஸ் வரவைத்து என் மகனை ஆம்புலன்சில் ஏற்றி காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு சிகிச்சை நடந்துக் கொண்டிருந்தது. ஆம்புலன்சில் என் மடியில் என்னிடம்பேசும் நிலையில் அம்மா என்று என் மகன் அழைத்தார். சிகிச்சைக்கு பிறகு இரவு 1.00 மணிக்கு என் மகன் இறந்துவிட்டார்.

தூசி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். புகார் அ.த.சா.ஆ.30-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.